தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## பலத்த மழையால் நிரம்பியது சிறுவாணி அணை



மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்த பலத்த மழை காரணமாக, சிறுவாணி அணை வெள்ளிக்கிழமை நிரம்பியது.கோவை மாநகரின் தாகம் தீர்க்கும் சிறுவாணி அணை, மேற்கு தொடர்ச்சி மலையில் கேரள எல்லையில் அமைந்துள்ளது. இந்த அணையின் மொத்த நீர்மட்டம் 15 மீட்டர் ஆகும். அணையின் நிலமட்டத்துக்கு கீழ் பழங்கால தடுப்பணையும், நீர்த்தேக்கமும் உள்ளன. அத்துடன் நிலமட்டத்துக்கு கீழ் 6.9 மீட்டர் வரை நீர்த்தேக்கமும், அடிமட்ட குடிநீர்க் குழாயும் உள்ளன. இந்த அணையிலிருந்து கோவை மாநகராட்சிக்கு உள்பட்ட 30 வார்டுகள் மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த சில நாள்களாக சிறுவாணி அணையில் தண்ணீர் குறைந்து காணப்பட்டது. இதனால் கோவையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று கருதப்பட்டது. இந்நிலையில் சில தினங்களாக மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால், சிறுவாணி அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால்

வெள்ளிக்கிழமை சிறுவாணி அண நிரம்பியது. அணை நிரம்பியதால், கோவை மாநகராட்சி மற்றும் வழியோரக் கிராமங்களுக்கு இன்னும் சில நாள்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு இருக்காது என்று குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.தற்போதைய நிலவரப்படி, அணையிலிருந்து நாள் ஒன்றுக்கு 101 எம்.எல்.டி. தண்ணீர் குடிநீர் விநியோகத்துக்காக எடுக்கப்படுகிறது.

## நிரம்பியது சோலையாறு அணை



ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய கல் அணையான சோலையாறு அணை வெள்ளிக்கிழமை முழுக் கொள்ளளவும் நிரம்பியது. கோவை மாவட்டம், வால்பாறையில் உள்ள சோலையாறு அணை முற்றிலும் கல்லால் கட்டப் பட்டதாகும். இதன் கட்டுமானப் பணி 1961-இல் துவங்கி 1971-ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. இந்த அணையின் மொத்த உயரம் 345 அடி. இதில் 165 அடி வரை நீர் தேக்கப்படுகிறது. தெலங்கானா மாநிலத்தில் உள்ள நாகார்ஜுன சாகர் அணைக்கு அடுத்தபடியாக அதிக உயரத்தில் அணை கட்டப்பட்டிருப்பதால், சோலையாறு அணை ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய கல் அணை என்ற பெருமைக்குரியதாகும். பரம்பிக்குளம்- ஆழியாறு (பிஏபி) பாசனத் திட்டத்தின் முக்கிய அங்கமான இந்த அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் மூலம் கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக் கணக்கான விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். 2013-ஆம் ஆண்டு பெய்த பருவமழைக்கு முன்னதாகவே ஜூன் 28-ஆம் தேதி அணை நிரம்பியது. இந்த

வருடம் ஜூலை மாதம் துவக்கத்தில் இருந்துதான் தொடர்மழை பெய்து வந்தது. அதனால், அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துவந்தது. சோலையாறு அணை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு 160 அடிக்கு நிரம்பியது. இதையடுத்து சேடல் டேம் வழியாக தண்ணீர் பரம்பிக்குளத்திற்கு வெளியேறிக்கொண்டிருக்கிறது. வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி அணைக்கு 3,330.90 கனஅடி நீர்வரத்தாக இருந்தது. அணையிலிருந்து இரண்டு மின் நிலையங்களுக்கும் 980.90 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்தது. அணை நிரம்பிய பின்னர் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி நிலவரப்படி அணைக்கு 3,350 கனஅடி நீர்வரத்தாக இருந்து, அணையில் இருந்து 2,058 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு, அணையின் நீர்மட்டமும் 161.04 அடியாக உயர்ந்தது. இதில் சேடல்டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கு 1,078 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நீர்மட்டம் 164 அடிக்கு உயர்ந்தால், அணையின் மதகுகள் திறக்கப்பட்டு உபரிநீர் வெளியேற்றப்படும். இந்த உபரிநீர் கேரள வனப் பகுதி வழியாகச் சென்று அரபிக் கடலில் கலக்கும். அணை முழுமையாக நிரம்பியிருப்பதால், பொதுப்பணித் துறை அதிகாரிகள் அங்கு முகாமிட்டுக் கண்காணித்து வருகின்றனர்.

## தென்னையில் மகசூல் இழப்பை தடுக்க வழி என்ன?



கற்பக விருட்சம் என்றழைக்கப்படும் பல்லாண்டுப் பயிரான தென்னையைத் தாக்கும் பூச்சிகள், அதன் கட்டுப்பாட்டு முறைகளை விவசாயிகள் தெரிந்து கொண்டால் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம். இதுகுறித்து தருமபுரி மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்னையை காண்டாமிருக வண்டு, சிவப்புக் கூன் வண்டு, ஈரியோபைட் சிலந்திப் பூச்சிகள் தாக்குகின்றன. காண்டாமிருக வண்டு இளம், வளரும் கன்றுகளைத் தாக்கும். விரியாத மட்டைகள், குருத்துப்பகுதி, அடிமட்டைகள், விரியாத பாளைகள் ஆகியவற்றில் சேதம் ஏற்படுத்தும். தாக்கப்பட்ட இலைகளின் குருத்துகள் விரிந்தவுடன் முக்கோண வடிவில் வெட்டியது போன்றும், திக்கப்பட்ட மரங்களின் குருத்துகள் வளைந்தும், சுருண்டும் காணப்படும். இந்த வகை வண்டுகள் சராசரியாக 10 சதம் வரை சேதம் ஏற்படுத்தும். கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: எருக்குழியில் காணப்படும் கூட்டுப்புழு, வண்டுகள் போன்றவற்றை பொறுக்கி அழிப்பதுடன், கார்பரில் 2 கிராம் நனையும் தூளை ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து 3 மாதங்களுக்கு ஒருமுறை எருக்குழியில் தெளிப்பதுடன், வளர்ந்து வரும் புழுக்களை அழிக்க பச்சை மஸ்கார்டின் என்ற பூஞ்சாணத்தை ஊற்றி அழிக்கலாம். மேலும், கவர்ச்சிப் பொறிகளை 2 ஹெக்டேருக்கு ஒன்று வீதம் வைப்பதன் மூலம் ஆண், பெண் வண்டுகளை கவர்ந்து அழிக்க முடியும். சிவப்புக் கூன் வண்டு: இந்த வகை வண்டுகளின் தாக்குதலை ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்க இயலாது. வண்டுகள் குருத்துப் பகுதிகளில் முட்டையிட்டு நேரடியாக குருத்தினுள் சென்று திசுக்களை உண்பதால் நடுக்குருத்து வாடி, பின்னர் அனைத்து மட்டைகளும் சரிந்து விடுகின்றன. சில நேரங்களில் தண்டுப் பகுதியில் ஏற்படும் காயங்களின் மூலம் உள்சென்று திசுக்களை உண்டு, சிறிய துவாரம் வழியாக வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்கள் மிகுந்த துர்நாற்றத்தை உண்டாக்கும். தாக்குதலைக் கட்டுப்படுத்த...: மரக்காயங்களில் முட்டையிடுவதால், காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இடிதாக்கிய மரங்கள், கூன் வண்டு தாக்கிய மரங்கள் இந்த வகை வண்டுகளுக்கு வாழ்விடமாக அமைவதால் அந்த மரங்களை அப்புறப்படுத்திவிட வேண்டும். கருத்தலைப் புழு: கீழ் அடுக்கிலுள்ள மட்டைகள் காய்ந்து பழுப்பு நிறமாகவும், இளமட்டைகள் மட்டும் பச்சையாகவும் தென்படும். தீவிர பாதிப்புக்கு உள்ளான மரங்கள் தொலைவிலிருந்து பார்க்கும் போது கருகியது போன்று காணப்படும். இலைகளின் அடிப்பரப்பில் புழுக்களின் எச்சங்கள் காணப்படும். கருந்தலைப் புழுக்கள் பச்சையத்தை சுரண்டி உண்பதால்

இலைகளின் ஒளிச் சேர்க்கைத் திறன் குறைந்து 30 முதல் 40 சதம் வரை விளைச்சல் குறைவதோடு, வெயில் காலங்களில் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை வெட்டி எரிப்பதுடன், டைக்குளோர்வாஸ் அல்லது மாலத்தியான் மருந்தை லிட்டருக்கு 2 மில்லி கலந்து பாதிக்கப்பட்ட இலைகளில் படும்வகையில் தெளிக்கலாம். எரியோபைட் சிலந்திப் பூச்சி: இவை 2 முதல் 6 மாத குரும்பைகளில் உள்ள காம்பின் தோட்டுக்கடியில் கூட்டமாக சேர்ந்து சாற்றை உறிஞ்சுவதால், குரும்பைகள் உதிர்கின்றன. இரண்டு மூன்று மாத குரும்பைகளில் முக்கோண வடிவில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறத் திட்டுகளை ஏற்படுத்துகின்றன. இந்த வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மரங்களில் ஒரு லிட்டர் தண்ணீரில் அசாடிராக்டின் ஒரு சத மருந்து 5 மில்லி அல்லது வேப்பெண்ணெய் 30 மில்லி மருந்தை லிட்டருக்கு ஒரு மில்லி ஒட்டுத் திரவம் கலந்து ஜனவரி, மார்ச், மே மாதங்களில் 2 முதல் 6 மாத குரும்பைகளில் தெளித்தால் போதுமானது. இதுதவிர, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தென்னை டானிக்கை மரத்துக்கு 200 மில்லி என்ற அளவில் 6 மாத இடைவெளியில் ஆண்டுக்கு 2 முறை வேர் மூலம் செலுத்தலாம். இது போன்ற ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மகசூல் இழப்பைத் தடுக்க முடியும் என்றார் அவர்.

## கர்நாடகத்தில் பலத்த மழை: வேகமாக நிரம்பும் அணைகள்



கர்நாடக மாநிலம், தென்கன்னட மாவட்டம், பண்டுவாலில் வெள்ளிக்கிழமை பெய்த மழையால் சாலையில் பெருக்கெடுத்த வெள்ளத்தில் ஊர்ந்து செல்லும் வாகனங்கள்.

கர்நாடகத்தில் பலத்த மழை பெய்து வருவதால், அங்குள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.கர்நாடகத்தில் தென் மேற்குப் பருவ மழை மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இதனால், தென் கன்னடம், வட கன்னடம், உடுப்பி உள்ளிட்ட கடலோர மாவட்டங்கள் தவிர, தென் கர்நாடகத்தின் உள் பகுதியில் அமைந்துள்ள ஹாசன், குடகு, சிக்மகளூர், ஷிமோகா போன்ற மாவட்டங்களிலும் வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்தது. வட கர்நாடகத்தின் உள்புறப் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது. கடந்த 24 மணி நேரத்தில் ஆகும்பேவில் 400 மி.மீட்டரும், ஹுலிகலில் 360 மி.மீட்டரும், சித்தாபுராவில் 290 மி.மீட்டரும் மழை பதிவாகின. காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை: காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியான மடிக்கேரி, பாகமண்டலா பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால், காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் வசிப்போர் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. குடகு, சிக்மகளூர், ஹாசன், தென் கன்னட மாவட்டங்களில் பள்ளிகளுக்கு சனிக்கிழமை (ஆக.2) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், கிருஷ்ணராஜ சாகர், கபினி, ஹேமாவதி, ஹாரங்கி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கிருஷ்ணராஜ சாகர், கபினி அணைகளில் இருந்து தமிழகத்திற்கு நொடிக்கு 40,130 கன அடி தண்ணீர்

திறந்துவிடப்படுகிறது. வேகமாக நிரம்பும் அணைகள்: பெல்லாரி, ராய்ச்சூர், கொப்பள் மாவட்டங்களின் ஜீவநதியாக உள்ள துங்கபத்ராவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், துங்கபத்ரா அணை வேகமாக நிரம்பி வருகிறது. மகாராஷ்டிர மாநிலத்தில் பலத்த மழை பெய்து வருவதால் கிருஷ்ணா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இயல்பு வாழ்க்கை பாதிப்பு: கிருஷ்ணா நதியிலிருந்து நொடிக்கு 1.45 லட்சம் கன அடி தண்ணீர் கர்நாடகத்துக்கு வருகிறது. இதனால், ஆற்றங்கரையோரம் உள்ள பல கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. தென் கன்னடம், ஷிமோகா, சிக்மகளூர், உடுப்பி, பாகல்கோட்டை, ராய்ச்சூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால், பல சாலைகள் துண்டிக்கப்பட்டு வாகனப் போக்குவரத்து முடங்கியுள்ளன.

## நீலகிரியில் தொடரும் கனமழை: 2 நாளில் 850 மி.மீ. பதிவு

நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக மீண்டும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமை நள்ளிரவிலிருந்து தொடங்கிய மழை வெள்ளிக்கிழமை பகலிலும் நீடித்தது. தொடர்ந்து பெய்யும் மழையால் நீலகிரி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடும் குளிரும் நிலவுகிறது. கேரள மாநிலத்தை யொட்டியுள்ள எல்லைப் பகுதிகளான கூடலூர், பந்தலூர் பகுதிகளிலும், அவலாஞ்சி, எமரால்டு, கிளன்மார்கன் மற்றும் நடுவட்டம் பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த 2 நாள்களில் மட்டும் மாவட்டத்தில் 850 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக அவலாஞ்சியில் 168 மி.மீரும், அப்பர்பவானியில் 162 மி.மீரும், தேவாலாவில் 132 மி.மீரும், கூடலூரில் 85 மி.மீரும், நடுவட்டத்தில் 82 மி.மீரும், கிளன்மார்கனில் 40 மி.மீரும், எமரால்டில் 29 மி.மீரும், உதகையில் 12 மி.மீரும் மழை பதிவாகியுள்ளது.

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 50 சத மானியத் தொகை அளிப்பு

துவரை மானியத் திட்டத்தில் நடந்துள்ள மோசடி உறுதி செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய மானியத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டு வருவதாக ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துவரை நாற்றுவிட்டு நடவு செய்தல் திட்டம் கடந்த நிதியாண்டில்

(2013-14) செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு துவரை நாற்றுவிட்டு நடவு செய்திட தேவையான இடுபொருள்களுக்கு ஆகும் செலவு 15 ஆயிரம் ரூபாயில் பின்னேற்பு மானியப் பட்டியல் பெறப்பட்டு 50 சதம் மானியமாக அளிக்கப்படுகிறது. இந்தப் பணிகளின் போது நாமக்கல் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றிய உதவி வேளாண்மை அலுவலர் செங்கோடன், விவசாயிகளிடம் இருந்து ரூ.2,500 தொகை பெற்றுக் கொண்டதுடன், மானியத் தொகை வழங்குவதிலும் இழுபறி செய்வதாக நாமக்கல் வட்டார விவசாயிகள் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு ஆட்சியரிடம் புகார் தெரிவித்தனர். இந்த நிலையில், இந்தப் புகார் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது:

துவரை சாகுபடி விவசாயிகள் அளித்த புகாரின் பேரில் விசாரணை அலுவலரை நியமித்து மேற்கொண்ட விசாரணையில், விவசாயிகளிடம் இருந்து தொகை பெற்றது உறுதியானதால் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர் பணியிட மாற்றம் செய்யப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையே, 39 விவசாயிகளிடமிருந்து பெற்ற தொகைகளை அந்த அலுவலரிடம் இருந்து திரும்பப் பெற்று விவசாயிகளிடம் அளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தில் வழங்க வேண்டிய 50 சத மானியத் தொகை ரூ.7,500-இல் விவசாயிகள் தலா ரூ.6374 முதல் ரூ.6401 வரை இடுபொருள்களாக பெற்றுள்ளனர். அந்த தொகை போக மீதமுள்ள ரூ.1099 முதல் ரூ.1126 வரையிலான தொகைக்கு பின்னேற்பு மானிய பட்டியல்கள் ஒப்புதல் செய்யப்பட்டு காசோலைகள் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 70 விவசாயிகளில் இதுவரை 40 விவசாயிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விவசாயிகளுக்கு நாமக்கல் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் மூலமாக காசோலைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அங்கக முந்திரி சாகுபடி விழிப்புணர்வு முகாம்

ஆண்டிமடம் அருகே அங்கக முந்திரி சாகுபடி விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் அருகேயுள்ள

குளத்தூர் கிராமத்தில் அங்கக முந்திரி சாகுபடி விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆர். விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.இம்முகாமில் வேளாண் விளைபொருள் குழு அமைப்பு மற்றும் செயல்பாடுகள் பற்றி விவசாயிகளிடம் விஸ்வநாதன் விளக்கினார்.

மேலும், நாட்டு ரக முந்திரி விவசாயிகள் தோட்டங்களை அங்ககச் சான்றுத் துறையில் பதிவு செய்து அதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறலாம் என்றும் கூறினார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் ராஜா ஜோஸ்லின் (தோட்டக்கலை), வேல்முருகன் (பயிர் பாதுகாப்பு), அங்கக முந்திரி சாகுபடி மற்றும் பூச்சி, நோய்க் கட்டுப்பாடு பற்றி தொழில்நுட்ப உரையாற்றினர். அங்ககச் சான்று பற்றிய சந்தேகங்களுக்கு, அங்ககச் சான்றளிப்புத் துறை வேளாண்மை அலுவலர் நல்லேந்திரன் விளக்கமளித்தார். முகாமில், அரியலூர் குழந்தைகள் நல மருத்துவர் பெ. இளங்கோவன் பங்கேற்று, முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பது குறித்து விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தினார். இவ் விழாவில் செந்துறை வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராஜசேகர், அரியலூர் வட்டார வேளாண் அலுவலர் ராஜேந்திரன் மற்றும், வேளாண்மைத் துறை மற்றும் வேளாண் வணிகம், விற்பனைத் துறைகளைச் சேர்ந்த வேளாண் உதவி அலுவலர்கள், ஆண்டிமடம் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## "60 வேளாண் விளைபொருள் குழுக்கள் அமைக்க இலக்கு'

அரியலூர் மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் 60 வேளாண் விளைபொருள் குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

ஜயங்கொண்டம் அருகேயுள்ள இடையார் கிராமத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறையின் மூலம் விளைபொருள் குழுக்களுக்கு தானிய களம் அமைக்கப்படும் இடத்தை வியாழக்கிழமை ஆய்வுசெய்த ஆட்சியர் மேலும் கூறியது: பயிர் சாகுபடி பருவத்தில் ஒரு குறிப்பிட்ட பயிரை பயிர் செய்யக்கூடிய 15 முதல் 20 விவசாயிகளை தேர்வு செய்து குழு அமைக்கப் படுகிறது. இந்தக் குழு விவசாயிகளுக்கு அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின்பு, அறுவடை பின்செய் நேர்த்தி சம்பந்தமாக தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின் விளைவாக விவசாயிகள் தங்களது விளைபொருள் களை தரம் பிரித்து, ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக விற்பனை செய்வதால்

விளைபொருள்களுக்கு கூடுதல் விலையும், கூடுதல் லாபமும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் 2014-15 ஆம் ஆண்டில் 60 விளைபொருள் குழுக்கள் அமைக்க இலக்கு பெறப்பட்டு இதுவரை 15 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், ஜயங்கொண்டம் வட்டம், இடையார் கிராமத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு விளைபொருள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலக்கடலை பயிர் நல்ல வளர்ச்சியில் உள்ளது. நிலக்கடலை பயிர் முதிர்ச்சி அடையும் நிலையில் விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பின் தொழில்நுட்பங்கள் சம்பந்தமாக பயிற்சி அளிக்கப்படும். சரியான முதிர்ச்சி நிலையில் அறுவடை செய்தல், நிலக்கடலை காய்களை நன்கு காயவைத்து கல், மண், தூசிகளை நீக்கி சுத்தம் செய்தல், தரம் பிரித்தல் ஆகிய தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்படும். தரம் பிரிக்கப்பட்ட விளைபொருள்களுக்கு விற்பனை விலையை விட 5 முதல் 10% வரை கூடுதல் விலை கிடைக்கும். மேலும், நிலக்கடலை காயை உடைத்து பருப்பாக்கி விற்பனை செய்தல், எண்ணெய் பிழிந்து நிலக்கடலை எண்ணெய், பிண்ணாக்கு விற்பனை செய்தல் மூலமும் அதிக விலையும், அதிக லாபமும் பெற இயலும் என்றார் ஆட்சியர். முன்னதாக, ஜயங்கொண்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்குச் சென்று, நிலக்கடலை மற்றும் எள் ஆகியவற்றின் தரம், அளவு ஆகியவற்றை ஆய்வு செய்தார். ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலை துணை இயக்குநர் சுப்பையா, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர் சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஸ்வநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சிக்கு அழைப்பு

நாகை மாவட்டம், சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறும் சம்பா நெல் சாகுபடி தொழில் நுட்பப் பயிற்சியில் பங்கேற்க விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் இரா. ராஜேந்திரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு : சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 7-ம் தேதி சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இந்தப் பயிற்சி முகாம் காலை 9.30 மணிக்குத் தொடங்கி நடைபெறும். இப்பயிற்சியில் நாகை மாவட்ட விவசாயிகள்,

பண்ணை மகளிர், இளம் விவசாயிகள் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் 04365- 246266 என்ற தொலைபேசி எண்ணில் வேளாண் அறிவியல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

**<u>விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி</u>**

பெரம்பலூர் அருகே உள்ள அயிலூர் கிராமத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், வெங்காயம் மற்றும் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நவீன சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது. இதில் வாலிகண்டபுரம் வேளாண் அறிவியல் மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் ஜே. கதிரவன், மண்ணில் உள்ள சத்துகளின் அடிப்படையில் சாகுபடி செய்யப்படும் பயிருக்கு ஏற்ற உரங்களை உரிய அளவில் இடவும், விதை நேர்த்தி, வீரிய காய்கறிகள் சாகுபடியில் குழித்தட்டு முறையில் திரட்சியான நாற்றுகள் தயாரித்தல், சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து காய்கறி சாகுபடி மேற்கொள்வதன் மூலம் இருப்பில் உள்ள நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளுதல், நீர் வழி உரமிடுதல் மூலம் உரச் செலவை குறைத்து உரங்கள் வீணாவதை தவிர்த்தல், களைக்கட்டுப்பாடு குறித்து விளக்கி கூறினார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, தோட்டக்கலைப் பயிர்களான காய்கறி சாகுபடி மூலம் விவசாயிகள் அதிக வருவாய் பெறுவதற்கான வாய்ப்புகள், சொட்டுநீர் பாசனம் அமைத்து காய்கறிகள் சாகுபடி மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்து பேசினார். தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) ம. இந்திரா, தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் நிழல் வலைக் கூடம் அமைத்தல், மண்புழு உரத் தொட்டி மற்றும் மண்புழு உர படுக்கை தயாரித்தல், கொடி வகை காய்கறிகள் சாகுபடிக்கு பந்தல் அமைப்பதற்கான மானியம், வீரிய ரக காய்கறிகள் சாகுபடி, மலர்கள் சாகுபடி, நறுமணப் பயிர்கள் சாகுபடி, பழப்பயிர்கள் சாகுபடிக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம், சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க வழங்கப்படும் மானியம் குறித்து விளக்கி கூறி

னார். இதில் பெரம்பலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) பி. ஆனந்தன், தோட்டக்கலை உதவி அலுவலர்கள் எஸ்.பி. கனகராஜ், ஏ. நாகராஜன், சி. பாலசுப்ரமணியன், சி. மகேஸ்வரி உள்பட அயிலூர், அ. குடிக்காடு, கல்பாடி,

எறையசமுத்திரம், எறையூர், நெடுவாசல் ஆகிய கிராமத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

<u>பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு</u>

உடுமலை: உடுமலை அமராவதி அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப் பட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். உடுமலை அமராவதி அணை, புதிய ஆயக்கட்டு பாசனத்தில், 25 ஆயிரத்து 250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஆயக்கட்டு பகுதியில், நிலவிய வறட்சி காரணமாக, நிலைப்பயிர்களை காப்பாற்ற, அணையில் இருந்து தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, அணையில் இருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு, பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. நேற்று காலை 7.00 மணிக்கு பிரதான கால்வாயில், வினாடிக்கு 200 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. படிப்படியாக வெளியேற்றம் அதிகரிக்கப்பட்டு, கால்வாயில் வினாடிக்கு 440 கன அடி தண்ணீர் வழங்கப்பட்டது. நிலைப்பயிர்களை காப்பாற்ற, அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டதால், உடுமலை, மடத்துக்குளம்,

தாராபுரம் பகுதியை சேர்ந்த விவசாயிகள், அணை ஷட்டர் அருகிலுள்ள அமராவதியம்மன் கோவிலில், சிறப்பு வழிபாடு நடத்தி, தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பொதுப்பணித்துறை அதிகாரிகள் குழுவினர், பிரதான கால்வாய் வழித்தடத்தில், குழாய் அமைத்து தண்ணீர் திருடப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு நடத்தினர். நேற்று காலை 7.00 மணி நிலவரப்படி, அமராவதி அணையின் நீர் மட்டம் 90 அடியில், 54.66 அடியாக இருந்தது.

**"இயற்கை விவசாய முறைக்கு மாறணும்' விவசாயிகளுக்கு கலெக்டர் "அட்வைஸ்'**

கரூர்: ""இயற்கை விவசாய முறையில் மூலிகை பயிர்கள், காய்கறி பயிர்கள் மற்றும் ஆடிபட்ட காய்கறி பயிர்களை பயிரிட்டு, அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபத்தை விவசாயிகள் பெற வேண்டும்,'' என, கரூர் கலெக்டர் ஜெயந்தி தெரிவித்தார்.

கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், வேளாண் துறை மூலம் நுண்ணீர் பாசன பராமரிப்பு மற்றும் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி, கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடந்தது.

கலெக்டர் பேசியதாவது: கரூர் மாவட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும், ஒருவகையான பயிர் நன்றாக மகசூல் தருகிறது. குறிப்பாக, குளித்தலை பகுதியில் வாழை மற்றும் வெற்றிலை நன்றாக விளைகின்றன. அரவக்குறிச்சி பகுதியில் முருங்கை, காய்கறி வகைகள் நன்றாக விளைகிறன. விவசாயிகள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு, பயிர் வகைகளை தேர்வு செய்து பயிரிடும் போது, மகசூல் எதிர்பார்த்த நிலையை பெற முடியும். தற்பொழுது விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் உபகரணங்கள் வழங்கப்படுகிறது. குறிப்பாக, தண்ணீரை பாதுகாப்புடன், அதிக பரப்பளவில் பயிரிட்டு பயபெறும் வகையில், அரசு மானியத்தில் நுண்ணீர் பாசன உபகரணங்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். நுண்ணீர் பாசன உபகரணங்களை பயன்படுத்துவது, பராமரிப்பு மற்றும் பழுது நீக்குவது குறித்த பயிற்சியில் கட்டாயம் விவசாயிகள் பங்கேற்க

வேண்டும். இயற்கை விவசாய முறையில் மூலிகை பயிர்கள், காய்கறி பயிர்கள் மற்றும் ஆடிபட்ட காய்கறி பயிர்களையும் பயிரிட்டு, அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெற வேண்டும் என்று அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில், வேளாண் துறை இணை இயக்குநர் தெய்வேந்திரன், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**குமரி மாவட்டத்தில் திடீர் காலநிலை மாற்றம் குளிர்ந்த காற்றுடன் சாரல்மழை**

நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்டத்தில் காலநிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டது. குளிர்ந்த காற்றுடன் சாரல் மழை பெய்து வருவதால் மாவட்டத்தில் இதமான காலநிலை நிலவுகிறது. குமரி மாவட்டத்தில் ஜூன், ஜூலை மாதங்களில் தென்மேற்கு பருவமழை பெய்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு போதுமான மழை பெய்யவில்லை. மட்டுமல்லாமல் நல்ல வெயில் அடித்தது. இதனால் அணைகளின் நீர்மட்டம் சரிய தொடங்கியது. ஜூலை இறுதியான பின்னரும் தொடர்ந்து தென்மேற்கு பருவமழை கண்ணாமூச்சி காட்டி வந்தது. இந்த நிலையில் நேற்று வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. நாகர்கோவில் பகுதியில் மாலையில் வானத்தில் கருமேகங்கள் திரண்டு இருந்தது. லேசான சாரல் மழையும் பெய்தது.பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணை பகுதிகளில் இரவு பலத்த மழை கொட்டித் தீர்த்தது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. பூதப்பாண்டி, சுருளோடு, கொட்டாரம், குளச்சல், ஆணைக்கிடங்கு, புத்தன் அணை, அடையாமடை மற்றும் அதன் புறநகர் பகுதிகளிலும் இரவு மழை பெய்தது. பாலமோரில் அதிகபட்சமாக 47.6 மி.மீ மழை பதிவானது. நேற்று காலை முதலே மாவட்டத்தில் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அவ்வப்போது சாரல் மழை பெய்தது. இதனால் பள்ளி சென்ற மாணவ-மாணவிகள் குடை பிடித்தவாறு சென்றனர். மலையோர பகுதியான பாலமோர் பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு அதிகரித்துள்ளது.

பேச்சிப்பாறை அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் இன்று காலை 8.95 அடியாக இருந்தது. அணைக்கு 538 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 168 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 37.70 அடியாக உள்ளது. மாவட்டத்தில் நிலவி வரும் இதமான காலநிலை மக்களுக்கு குதூகலத்தை ஏற்படுத்தியுள்ளது.

**நீலகிரியில் மழை தீவிரம்**

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில், மீண்டும் மழை தீவிரமடைய துவங்கியுள்ளது; ஒரே நாளில், 451 மி.மீ., மழை கொட்டியது. நீலகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. விட்டு, விட்டு பெய்யும் மழை, நேற்று முன்தினம் துவங்கி, மீண்டும் தீவிரமடைந்தது. நேற்று முன்தினம், கூடலூரில் 53 மி.மீ., நடுவட்டத்தில் 42, கிளன்மார்கனில் 34, அப்பர் பவானியில் 67, அவலாஞ்சியில் 109, தேவாலாவில் 74 மி.மீட்டர் என, மாவட்டம் முழுக்க 451 மி.மீ., மழை பெய்தது. மழையால், ஊட்டியில் குளிர் அதிகரித்தது.

## சிப்காட்டுக்கு நிலம் எடுக்க எதிர்ப்பு விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை சிப்காட்டுக்கு விவசாய நிலங்களை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார் கோவில் பகுதியில், சிப்காட் தொழிற்சாலைகள் அமைக்க, தமிழக அரசு திட்டமிட்டுள்ளதை தொடர்ந்து, விவசாய நிலங்களை கையகப்படுத்தும் பணியை அதிகாரிகள் துவக்கியுள்ளனர். விவசாய நிலத்தை அழிக்கும் விதத்தில், எந்த திட்டத்திற்காக நிலம் கையப்படுத்த கூடாது எனக்கூறி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பேரணியாக சென்று, கலெக்டரிடம் மனு கொடுக்க சென்றனர். பேரணியில் கரும்பு, கீரை போன்றவைகளை கையில் ஏந்திய படி சென்றனர். போலீஸார் தடுத்து நிறுத்தினர். விவசாயிகளுடன் போலீஸார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ஆனால் விவசாயிகள் ஏற்கவில்லை. மேலும், போலீஸாரை கண்டித்து மறியல் செய்ய முற்பட்டனர். இதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை, போலீஸார் கைதுசெய்தனர்.

## விவசாயிகளுக்கான பயிற்சியில்கல்லூரி மாணவர்கள்

திண்டுக்கல்:புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு கற்றுகொடுப்பதற்கான பணியில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், கிராமங்களில் தங்கியிருந்து விவசாயிகளின் விளை நிலங்களை ஆய்வு செய்து அவர்களின் பிரச்னைகளை நிவர்த்தி செய்வதற்கான முகாம் திண்டுக்கல் மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ளது. மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த 8

மாணவர்கள், ரெட்டியார்சத்திரம் கரிசல்பட்டி கிராமத்தில் பயிற்சி அளித்து வருகின்றனர்.உலக இயற்கை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் கரிசல்பட்டியில் நடத்தப்பட்டது. திரு இருதய தொடக்கப்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். மூன்று மாதங்கள் நடத்தப்படும் பயிற்சியில் தென்னை மரங்களுக்கு தேவைப்படும் ஊட்டச்சத்து மருந்துகள், பயிர் விதை நேர்த்தி, குழித்தட்டு நாற்றங்கால், பூச்சி இனக்கவர்ச்சி பொறி தொடர்பான தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு மாணவர்கள் கற்றுக்கொடுக்கினறனர். ரெட்டியார்சத்திரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குனர் மனோகரன், ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகம் முழுவதும் ரூ.37.17 கோடியில் 300 அம்மா சூப்பர் மார்க்கெட்**



110வது விதியின் கீழ் முதல்வர் ஜெயலலிதா நேற்று வெளியிட்ட அறிக்கை:

* கூட்டுறவு நிறுவனம் சார்பில் 114 பல்பொருள் அங்காடிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் 23 அமுதம் பல்பொருள் அங்காடிகள் என மொத்தம் 137 அங்காடிகள் தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, தமிழகம் முழுவதும் மொத்தம் ரூ.37.17 கோடி செலவில் 300 அம்மாஅமுதம்பல்பொருள்அங்காடிகள்'துவங்கப்படும்.

* நடப்பாண்டிலும்,விவசாயிகளின் சிரமத்தை குறைக்கும் வகையில், விளைவிக்கும் இடங்களுக்கு அருகிலேயே ரூ.35 கோடி மதிப்பில் 100 நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் கட்டப்படும். இவற்றில் 75 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டிடங்கள் காவிரி பாசனப் பகுதிகளிலும், இதர 25 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டிடங்கள் திருவண்ணாமலை, காஞ்சிபுரம், ஈரோடு, கன்னியாகுமரி மாவட்டங்களிலும்கட்டப்படும்.

* விவசாயிகள் மற்றும் வணிகர்கள் இருப்பு வைக்கும் பொருட்களுக்கு அனைத்து வங்கிகளிலும் மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகள் மூலம் கடன் வசதி பெற இயலும். மாற்றத்தக்க சேமிப்புக் கிடங்கு ரசீதுகளை பெறுவதற்கு, பொருட்களின் தரம், ஈரத் தன்மை, வகைப்பாடு ஆகியவற்றை விஞ்ஞான ரீதியில் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. எனவே ஸ்ரீரங்கம், திருச்சி, திருவாரூர், ஈரோடு, ஆரணி, வேலூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய

விஞ்ஞான ரீதியிலான பரிசோதனை கூடங்கள் ரூ.7 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

* தமிழக அரசு உணவு பாதுகாப்பை அளிப்பதுடன், உணவுப் பொருள்கள் தரமானதாக, உண்பதற்கு தகுதியானதாக உள்ளதா , கலப்படப் பொருட்கள் ஏதேனும் உள்ளதா என்பதை கண்டறியவும் தேவையான பயிற்சிகளை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அளிக்க ஏதுவாக ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்க காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்தில் உள்ள 3.03 ஏக்கர் நிலம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின், ஆய்வகம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கப்படும். இதற்கு தமிழக அரசின் பங்கீடாக 40 சதவிகிதத் தொகையான 4 கோடியே 12 லட்சம் ரூபாய் அளிக்கப்படும். இவ்வாறு ஜெயலலிதா அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**<u>கடந்த ஆண்டை விட உணவு தானிய உற்பத்தி 8 மெட்ரிக் டன் வரை குறையும்</u>**




புதுடெல்லி: தாமதமான பருவமழையால் உணவு தானிய உற்பத்தி இந்த ஆண்டு 8 மெட்ரிக் டன் வரை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் 44 மில்லியன் ஹெக்டேரில் நெல் சாகுபடி நிலங்களாகும். இதில் சுமார் 40 மில்லியன் ஹெக்டேரில் காரி பருவ சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 2013-14 ஆண்டில் காரி பருவ நெல் சாகுபடி எதிர்பார்த்தபடி 97.78 மில்லியன் டன்களாக இருந்தது. அரிசி ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் கூறுகையில், ஒடிசா, மேற்கு வங்கம், சட்டிஸ்கார் மற்றும் பீகார் பகுதிகளில் வயல்களில் அதிக அளவு நெல் விதைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நல்ல மழை பெய்தால், பாடி சாகுபடி அமோகமாக இருக்கும். ஜூலை மாதம் முடிவுறும் நிலையில் இந்த ஆண்டு பருவமழை தாமதமாக பெய்துள்ளது. இருப்பினும் பெரும்பாலான விவசாயிகள் நர்சரிக்களில் விதை விதைத்துள்ளனர். பின்னர் நாற்று எடுத்து நடுவதை மட்டும் வயல்களில் மேற்கொண்டுள்ளனர் என்றார். உணவு அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், கடந்த 2013ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உணவு தானிய உற்பத்தி பொதுவாகவே 5 முதல் 8 சதவீதம் குறைவாக இருக்கும். மேலும், நெல் சாகுபடியும் பெருமளவு எதிர்பார்த்துவிட முடியாது. எனினும், நாட்டின் வடபகுதியில் கால்வாய் பாசனம் மற்றும் பம்ப் செட்களில் உதவியால் இழப்பு ஈடுசெய்யப்பட்டு விளைச்சல் பாதிப்பு தடுக்கப்படும். பாசுமதி வகை இல்லாத

நீண்ட கால நெல் சாகுபடி க்கு 140-150 நாட்கள் தேவைப்படும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அறுவடை தாமதமாகத்தான் மேற்கொள்ள வேண்டிவரும். ஆனால், அறுவடையின் அளவில் பெரிய வேறுபாடு இருக்காது. விதைப்பு முடிந்த பிறகு மழை குறைந்தால் விளைச்சல் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றார்.

பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்தரபிரதேச பகுதிகளில் கால்வாய் பாசனம் மூலம் பயிர் செய்யப்பட்டுள்ளதால், தாமதமான பருவமழை இந்த பகுதியில் பெரும் பாதிப்பை ஏற்பட்ட சாத்தியமில்லை. ஆனால், நாட்டின் பிற பகுதிகளில் நெல் சாகுபடி தாமதமான மழையால் பாதிக்கப்பட்டதும் மறுப்பதற்கில்லை. அது மட்டுமின்றி, குஜராத் மாநிலம் சவுராஷ்டிரா பகுதியில் அபரிமிதமான மழை விளைச்சலில் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள மாநிலங்களில் விளைச்சலை அவ்வளவு தூரம் எதிர்பார்க்க முடியாது. மேலும் மேற்கு பகுதிகளில் அரிசி விளைச்சல் நிலங்களின் அளவு குறைவு என்பதால், நாட்டின் அரிசி உற்பத்திக்கு இதனால் பெரிய பாதிப்பு இருக்காது.

நாட்டின் கிழக்கு பகுதிகளில் பசுமை புரட்சி ஏற்படுத்தும் முயற்சியாக மத்திய அரசு ஆண்டுக்கு ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்கிறது. இந்த திட்டம் மூலம் அசாம், பீகார், சாட்டீஸ்கார், ஜார்க்கண்ட், ஒடிசா, கிழக்கு உத்தரபிரதேசம், மேற்கு வங்க பகுதிகள் பலன் பெறுகின்றன. இதுகுறித்து சாட்டீஸ்கர் நெல் அரவை ஆலை சங்க நிர்வாகி கூறுகையில், கிழக்கு பதிகளில் நெல் சாகுபடி ஒரு மாதம் தாமதமாகலாம். நாற்று நடும் பணி முழு வீச்சில் நடந்து வருகிறது. அறுவடையை பொறுத்தவரை, கடந்த ஆண்டு கிடைத்த அளவுக்கு எதிர்பார்க்கலாம் என்றார்.

## **கத்தரிக்காயில் காய்ப்புழு நோய் தாக்குதலை தடுக்க ஆலோசனை**

பழநி, : கத்தரிக்காயில் காய்ப்புழு நோய் தாக்குதல் ஏற்பட்டால் தப்பிக்கும் வழிமுறை குறித்து வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பழநி பகுதியில் உள்ள அக்கமநாயக்கன்புதூர், கரடிகூட்டம், காவலப்பட்டி, கணக்கன்பட்டி, பாப்பம்பட்டி, சத்திரப்பட்டி, போதுப்பட்டி, தாசிரிபட்டி, அமரபூண்டி உள்ளிட்ட கிராமங்களில் போதிய நீர் ஆதாரம் இல்லாததால் கிணற்றுநீர் பாசனம் கொண்டு காய்கறி பயிரிடுதல் அதிகமாக நடக்கிறது. இக்கிராமங்களில் கத்தரிக்காய், வெண்டைக்காய், வெங்காயம், தக்காளி உள்ளிட்ட காய்கறிகள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. தற்போது கத்தரிக்காய் அதிகளவு பயிரிடப்பட்டுள்ளது. இக்காயில் தற்போது காய்ப்புழுத் தாக்குதல் ஏற்பட்டு, செடியிலேயே அழுகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விற்பனை சந்தையில் கத்தரிக்காயின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்பு கிலோ ரூபாய் 60க்கு விற்பனையாகி வந்த கத்தரிக்காய், கடந்த சில தினங்களாக கிலோ ரூபாய் 25 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்நோய் தாக்குதல் குறித்து பழநி வட்டார தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, காய்ப்புழு தாக்குதல் ஆரம்ப கட்டமாக இருந்தால் என்டோசல்பான் அல்லது குளோரி பைரிபாஸ் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி அளவிலும், தாக்குதல் அதிகமாக இருந்தால் டிசைடர் மருந்து 1 லிட்டருக்கு 1 மில்லி கலந்து இரண்டு, மூன்று நாட்களுக்கு தெளிக்க வேண்டும். தாக்குதல் புழுவின் பரிணாமம், முட்டை, புழு என பல்வேறு கட்டங்களாக இருப்பதால் லார்வின் மருந்தை 10 லிட்டர் நீருக்கு 20 கிராம் கலந்து தெளித்து வந்தால் இந்நோய் தாக்குதலில் இருந்து தப்பிக்கலாம் என்றனர்.

**<u>யூரியா உரம் விற்பனைக்கு புதிய முறை வேளாண் உதவி இயக்குநர் தகவல்</u>**

பழநி, : யூரியா உரம் பயன்பாட்டிற்கு புதிய முறை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மத்திய அரசு, விவசாயிகள் வாங்கும்

யூரியா மூட்டைக்கு மானியம் வழங்குகிறது. ஒரு மூட்டை யூரியாவின் விலை சுமார் ரூ.2,800 ஆகும். இதற்கு மத்திய அரசு மானியமாக ரூ.2500 வழங்குகிறது. இதுபோக விவசாயிகள் சுமார் ரூ.300 மட்டும் செலுத்தி யூரியா உரம் பெற்று வருகின்றனர். விவசாயிகள் தங்கள் சாகுபடி பரப்பில் அளவிற்கு அதிகமாக உரத்தை பயன்படுத்துகின்றனர். இதனால் அரசுக்கு இழப்பீடு ஏற்படுவதுடன் நிலமும் மாசடைகிறது. இதனை தடுக்க குஜராத், கேரளா போன்ற ஊர்களில் அமல்படுத்தப்பட்டுள்ள புதிய முறை தற்போது தமிழகத்திலும் அமல்படுத்தப்பட்டு உள்ளது. இதன்படி சிறு, குறு விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி தங்கள் வயல் அல்லது தோட்டத்தில் மண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதற்கு கட்டணமாக ரூ.20 செலுத்த வேண்டும். இதன்பின் வேளாண் துறையினர் மண் மாதிரியை பரிசோதனை செய்து அதிலுள்ள சத்து, தேவையான சத்துக்கள், யூரியா உரத்தின் தேவை ஆகியவை குறித்த பரிந்துரைகள் இடம் பெறும் உழவர் அட்டை வழங்கப் படும். விவசாயிகள் இதை வைத்து உரக்கடைகளில் உரம் வாங்கி கொள்ளலாம். சிறு, குறு விவசாயிகள் இந்த அட்டையை பெற தங்களது புகைப்படம், சிட்டா, அடங்கல் நகலுடன் வேளாண் அலுவலகத்தை அணுகலாம் என வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**திட்டமிட்டு செயல்பட்டால் ஒவ்வொரு விவசாயியும் பணக்காரர் ஆகலாம் பயிற்சி முகாமில் தகவல்**

கரூர், : நபார்டு வங்கி யின் மூலம் விவசாயிகளே விவசாயிகளுக்காக அமை க்கும் விவசாய உற்பத்தியா ளர் நிறுவனம் குறித்த இர ண்டுநாள் பயிற்சி நபார்டு

வங்கியின் முதன்மை பொ துமேலாளர் வெங்கடேஸ் வர ராவ் தலைமையில் ந¬ டபெற்றது. கரூர் மாவ ட்ட கலெக்டர் ஜெயந்தி கலந்துகொண்டு விவசாயிகளுக்க £ன பயிற்சியை துவ க்கி வை த்தார். கலெக்டர் பேசியது: விவசாயிகள் தங்கள் உற்பத்தி செய்யும் பொரு ட்களை தாங்களாகவே சந்தைப்படுத்துவது மற்றும் விவசாயிகள் தங்களுக்கு தேவையான இடுபொருட்களை நேரடியாக நிர்ணயிக்கப்பட்ட விலையில் பெறுவது குறித்தே பயிற்சி நடத்தப்படுகின்றன. இதில் திருச்சி, நாமக்கல், கோவை, ஈரோடு, திருப்பூர், புதுக் கோட்டை, பெரம்பலூர், திருநெல்வேலி, ஆகிய மாவ ட்டத்தை சேர்ந்த 100 முன் னோடி விவசாயிகள் கரூர் மாவட்ட விவசாயிகளுடன் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டுள்ளது பெருமைக்குரியது. உணவுக்கு அடித் தளம் விவசாயம். அந்த விவசாயம் மிக நல்ல முறை யில் அமைய வேண்டுமென் றால் விவசாயிகள் திட்டமி ட்டு விவசாயப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயல்பட் டால் ஒவ்வொரு விவசாயி யும் பணக்காரர் ஆக முடி யும் என்றார். நிகழ்ச்சியில் வேளா ண் மை உற்பத்தி கழக அலுவலர்கள் பூங்கோதை, லெட்சுமணன், திரவியம், கரூர் மாவட்ட நபார்டு வங்கி உத விபொது மேலாளர் பார்த்திபன், மாவட்ட முன் னோடி வங்கி மேலாளர் முருகேசன், நச்சலூர் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத் தலைவர் கரிகா லன் மற்றும் வங்கியாளர்கள் கலந்துகொண்டனர்.

**<u>தரிசு நிலங்களை கோடை உழவு செய்து பயிரிட்டால் அதிக மகசூல்தோட்டக்கலை உதவி இயக்குனர் தகவல்</u>**

கடலூர், : தரிசாக கிடக்கும் சாகுபடி நிலங்களின் தரத்தை மேம்படுத்த கோடை உழவு செய்து சாகுபடி செய்தால் நல்ல பலன் கிடைக்க வாய்ப்பு என்று கடலூர்

தோட்டக்கலை உதவி இயக்குநர் தகவல் தெரிவித்துள்ளார். அறுவடைக்கு பின்னர் வயலை அப்படியே தரிசாக விட்டு விடுகிறோம். அடுத்த பயிர் செய்யும் போது மட்டும் தேவையான உழவியல் முறைகளை கடைபிடித்து வருவது வழக்கமான ஒன்று. அவ்வாறு செய்யாமல் அவ்வப்போது கிடைக்கும் சிறய அளவு மழையை பயன்படுத்தி வயலை உழுது வைத்துக் கொள்வதே கோடை உழுவு என்பதாகும். பெரும்பாலான விவசாயிகள் இதில் ஆர்வம் காட்டுவதில்லை. கோடை உழவின் அவசியம்:  பாசன நீர் குறைந்ததும் விவசாய சாகுபடி பணி நிறுத்தப்பட்டு விடுகிறது. நல்ல மழை கிடைத்து கிணற்றில் நீர் ஆதாரம் கிடைக்கும் வரை சாகுபடி நிலம் தரிசாகவே விடப்படுகிறது. இச்சமயத்தில் இடைப்பட்ட காலங்களில் கிடைக்கும் ஓரிரு மழையை பயன்படுத்தி உழவு செய்து வைத்துக்கொண்டால் மண்ணின் தரம் உயரும். அடுத்த சாகுபடியில் அதன் பலனை அடையலாம். நன்மைகளான கோடை உழவு செய்யும் போது முந்தைய பயிரின் வேர், தண்டு பாகம், மண்ணோடு மண்ணாக கலந்து எருவாகிறது. முந்தைய பயிரைத் தாக்கிக் கொண்டு இருந்த பூச்சிகளின் முட்டை, புழுக்கள், கூட்டுப் புழுக்கள் அப்படியே மண்ணில் புதைந்து இருக்கும். அவை அனைத்தும் உழவின் போது மேலே கொண்டு வரப்பட்டு சூரிய வெப்பத்தால் அழிக்கப் படுகிறது. உழவின் போது கிடைக்கும் வெப்பம், சூரிய ஒளி, காற்று ஆகியவற்றோடு சில இரசாயன உப்புகள் சேர்ந்து கிடைக்காத மாறி பயிருக்கு எளிதில் கிடைக்கும் சத்துக்களாக மாறி பலனளிக்கிறது. அடுத்தடுத்து பெய்யும் மழை நீர் வயலிலேயே சேகரிக்கப்படுகிறது. களைகள் வேறோடு பிடுங்கி அழிக்கப்படுகிறது. சூரிய ஒளி தின மும் மண்ணுக்குள் ஊடுருவி தீமை செய்யும் நோய் கிருமிகளை அழிக்கிறது. இதுபோன்ற என்னெற்ற பயன்களை பெற

விவசாயிகள் கோடை உழவு பணி யை தொடங்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. இத்தகவலை கடலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் வீரமணி தெரிவித்துள்ளார்.

**<u>உழைப்பே இல்லாமல் வருமானம் தரும் தொழில் தேனீ வளர்ப்பு கருத்தரங்கில் தகவல்</u>**

காரைக்கால், : காரைக்கால் வேளாண்துறையின் அங்கமாக செயல்பட்டுவரும் ஆத்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு மற்றும் தேனீயின் முக்கியத்துவம் குறித்த சிறப்பு கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. கருத்தரங்கை, கலெக்டர் முகமது மன்சூர் தொடங்கி வைத்து பேசியது: விவசாயிகள் நெல், கரும்பு, தென்னை வளர்ப்பு மட்டுமே விவசாயம் என இல்லாமல் ஒரே இடத்தில், மீன் பண்ணை, கோழி, ஆடு வளர்ப்பு என செய்து பழகவேண்டும். அந்த வரிசையில் தேனீ வளர்ப்பும் சிறந்தது என்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கின்னஸ் சாதனையாளர் மதுரை ஜோஸ்பின் செல்வராஜ் பேசியது: பூவில் இருப்பது எல்லாம் தேன் ஆகாது. பூவில் உள்ள மதுரத்தை தேனீ தனது வயிற்றில் உறிஞ்சி கூண்டுக்கு கொண்டு சென்று தேனாக மாற்றுகிறது. அத்தகைய தேனீயை நாங்கள் தேவதை கள் என செல்லமாக அழைக்கிறோம். உழைப்பே இல்லாமல் வருமானம் தரும் தொழில் இந்த தேனீ வளர்ப்புத்தான். இதற்கு ஒரு குடிசை போதும். தேனீ வளர்த்தால் அது கொட்டும் என பலர் பயம் கொள்கின்றனர். நாங்கள் தேனீ கொட்டா மல் அதை வளர்ப்பது குறித்து இலவசமாக சொல்லித்தருகிறோம். ஆனால், தேனி கொட்டுவது நல்லது. வெளிநாடுகளில் தேனீ கொட்ட ரூ.300 வசூல் செய்கின்றனர். நாங்கள் மதுரையில் இலவசமாக கொட்டவிடுகிறோம். வீட்டுக்கு ஒரு தேனீப்பெட்டி. குடும்பத்திற்கு

ஆயுள் கெட்டி என்பதுதான் எங்கள் தாரக மந்திரம் என்றார். கருத்தரங்கில், மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன், வேளாண் அறிவியல் நிலைய முதல்வர் ராஜேந்திரன், இணை வேளாண் இயக்குனர் முகமது உஸ்மான், விற்பனைக்குழு செயலர் முகமது தாசிர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முடிவில் திட்ட துணை இயக்குனர் முத்துகிருஷ் ணன் நன்றி கூறினார்.

## <u>விவசாயிகள் விழிப்புணர்வு முகாம்</u>

திருச்சுழி,: கோவிலாங்குளம் வேளாண் அறி வியல் நிலையம் சார்பில் டி.வேப்பங்குளம் கிராமத்தில் மண் பரிசோதனை மற்றும் மண் வளம் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய இணை இயக்குநர் செண்பகராஜ் பேசினார். மண் மாதிரி எடுத்தல், மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் பயிர்களுக்கு ஒருங்கிணைந்த உர நிர் வாகம் செய்வதன் அவசியம் ஆகிய தலைப்புகளில் வே ளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் முனை வர் ஜெகதீஸ்வரி பயிற்சி அளித்தார். பயிர்களில் நுண்ணூட்டச்சத்து குறை பாடு பற்றியும், மேலாண்மை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. உர நிர்வாகம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலு வலர் சுந்தரவள்ளி, நெற்பயிரில் உயிர் உர விதை நேர் த்தி பற்றி பேசினார். நிலைய உதவிப் பேராசிரியர்கள் ரா ஜேந்திரன் மண்வளத்தின் முக்கியத்துவம் பற்றியும், முனைவர் தீபாகரன் மானாவாரி நிலங்களில் வேர் உட்பூசானத்தின் முக்கியத்துவம் பற்றியும் பேசி னர். முகாமில் காரியா பட்டி வட்டத்தை சேர்ந்த 80க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>வறட்சி மாவட்டமாக அறிவித்து இழப்பீடு வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை</u>**

நாமக்கல்,: நாமக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். பல்வேறு துறைகளை சார்ந்த அரசு அதிகாரிகள், அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்க பொதுச் செயலாளர் ராஜேந்திரன் பேசியதாவது: மானாவாரி மகசூலான உளுந்து, பாசிப்பயிறு, நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் பருவ மழை இல்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால், ஆய்வை மேற்கொண்டு, விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 3 ஆண்டுகளில் பருவ மழைகள் நாமக்கல் மாவட்டத்தில் பொய்த்துள்ளதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. ஆழ்துளை கிணறுகளை அமைத்து நீர் மேலும் உறிஞ்சப்படுவதால், நிலத்தடி நீர் வளம் குறைந்து வருகிறது. எனவே, நாமக்கல் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் சுந்தரம் பேசுகையில், மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மேட்டூர் வாய்க்காலில் தண்ணீர் திறந்தால், குடிநீர் தட்டுப்பாடு நீங்கி, கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கும். மேலும், பசு மாடுகளில், கிடாரி இன கன்றுகள் இனப்பெருக்கத்துக்கு தரமான விந்துகளை பயன்படுத்த வேண்டும் என்றார். மேலும், கரும்பு விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும், மரவள்ளி கிழங்கிற்கு சராசரி

விலை நிர்ணயம் செய்யவேண்டும், புதுச்சத்திரம் ஏரிப்பகுதியில் ஆக்கிரமித்து கட்டிடம் கட்ட முயற்சிக்கும் தனிநபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், 3 சதவீத மானிய விலையில் தென்னை கன்றுகள் தரவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பேசினர். விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து கலெக்டர் தட்சிணாமூர்த்தி பேசியதாவது: விவசாயிகளின் கோரிக்கைகள் அனைத்தும் அந்தந்த துறை அலுவலர்கள் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். நாமக்கல் மாவட்டத்தில் 140 மக்காச்சோள ஆலைகள் உள்ளன. 116 ஆலைகளில் ஆய்வு செய்யப்பட்டு, 63 ஆலைகளில் இருந்து மாதிரிகள் சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. தரமற்ற சேகோ தயாரித்த 5 ஆலைகளுக்கு தலா 50 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. 9 ஆலைகள் டிஆர்ஓ விசாரணையில் உள்ளது. 4 யூனிட்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொடர் நடவடிக்கைகளால் தற்போது, நாமக்கல் மாவட்டத்தில் மக்காசோள மாவில் கலப்படும் செய்யப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. இதை தவிர, நாமக்கல் மாவட்டத்தில் பட்டா கேட்டு விண்ணப்பிக்கப்பட்ட 99,600 மனுதாரர்களுக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 40,400 மனுக்களில் பல்வேறு காரணங்களால் நிலுவையிலும், தள்ளுபடியும் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளில், அரசு விதிமுறைகளுக்கு உட்பட்ட கோரிக்கைகளுக்கு மட்டுமே தீர்வு காணப்படும். இவ்வாறு கலெக்டர் தட்சிணாமூர்த்தி பேசினார்.

**<u>பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் ஆய்வு உட்கட்டமைப்பு வசதி செயல்படுத்த உத்தரவு</u>**

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகத்தில் கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்தார். உட்கட்டமைப்பு வசதி செயல்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பட்டுக்கோட்டை அடுத்த பொன்னவராயன்கோட்டையில் உள்ள தென்னை வணிக வளாகம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த தென்னை வணிக வளாகத்தில் தேங்காயிலிருந்து கொப்பரை தயாரிக்கும் பணியை கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்தார். அப்போது தேங்காய் உடைத்தல், உடைத்த காய்களை 3-4 நாட்கள் வெயிலில் உலர்த்துதல், கொப்பரை பிரித்தெடுத்தல், கொப்பரைகளை வெயிலில் உலர்த்திய பின் தரம் பிரித்தல், எண்ணெய் பிழிய சிப்பம் கட்டுதல் பணிகளை கேட்டறிந்தார். மேலும் தென்னை வணிக வளாகத்தில் உள்ள தேங் காய் எண்ணெய் பிழியும் மினி ஆயில் யூனிட்டை பார்வையிட்டார். தென்னை வணிக வளாகத்தில் தேங்காயிலிருந்து வர்ஜின் ஆயில் (அழகு சாதன பொருட்கள் தயாரிக்க பயன்படுவது), ஊட்டமேற்றிய கரித்தூள் (நன்னீர் வடிகட்டிகளில் பயன்படுவது) ஆகிய உயர் மதிப்பூட்ட பொருட்கள் தயாரிக்கும் ஆலைகள் அமைய உள்ளது குறித்து கொச்சின் தென்னை வளர்ச்சி வாரிய உறுப்பினர் மற்றும் துணைத்தலைவர் கலைச்செல்வனிடம் கேட்டறிந்தார். ஆய்வின்போது தஞ்சை வேளாண் வணிக துணை இயக்குனர் கலியராஜ், தஞ்சாவூர் விற்பனைக்குழு செயலாளர் ரவி, பட்டுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அரங்கநாதன், தாசில்தார் பாஸ்கரன், பொன்னவரயன்கோட்டை ஊராட்சி தலைவர் ராஜகுமார், வேளாண் அலுவலர்கள் சாருமதி, மாலதி, கண்காணிப்பாளர் தர்மராஜ் உடனிருந்தனர். ஏற்பாடுகளை பட்டுக்கோட்டை வேளாண் வணிக அலுவலர் சுஜாதா செய்திருந்தார்.

**நீர் பிடிப்பு பகுதிகளில் மீண்டும் கன மழை அணைகளில் நீர் வரத்து அதிகரித்தது**

மஞ்சூர், : நீர் பிடிப்பு பகுதிகளில் மீண்டும் கன மழை பெய்து வருவதால் அணைகளுக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மழையுடன் இடைவிடாமல் சூறாவளி காற்றும் வீசி வருவதால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மஞ்சூர் சுற்றுபுற பகுதிகளில் சூறாவளி காற்றுடன் பெய்து வரும் கன மழையால் அப்பர்பவானி, கோரக்குந்தா, கிண்ணக்கொரை, அவலாஞ்சி, எமரால்டு மற்றும் ஊட்டி, குன்னூர் சாலைகளில் தினசரி மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது. பல்வேறு இடங்களில் மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளது. மின் கம்பங் களின் மீது மரங்கள் சாய்ந்து விழுவதால் அடிக்கடி மின்சார விநியோகமும் துண்டிக்கப்படுகிறது. தொடர்ந்து நேற்று முன் தினமும் நீர் பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக நேற்று காலை அவலாஞ்சி பகுதியில் 109 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதே போல் முக்குருத்தியில் 83 மி.மீ, தேவாலாவில் 74 மி.மீ, அப்பர்பவானியில் 67 மி.மீ, பார்ஸன்ஸ்வேலியில் 60 மி.மீ மழையும் பெய்துள்ளது. மாவட்டத்தில் பிற இடங்களில் பெய்த மழை விவரம் வருமாறு: கூடலூர்-53 மி.மீ, போர்த்திமந்து-50 மி.மீ, நடுவட்டம்-42.6 மி.மீ, கிளன்மார்கன்-34 மி.மீ, சிங்காரா-26 மி.மீ, எமரால்டு-25 மி.மீ, சான்டிநல்லா-17, ஊட்டி-11.3 மி.மீ, கேத்தி-10.2 மி.மீ, பைக்காரா-9 மி.மீ, குன்னூர்-7 மி.மீ, குந்தா-7 மி.மீ, பரளி, கோத்தகிரி, கோடநாடு, பர்லியார் பகுதிகளில் தலா 3 மி.மீ, கெத்தை-2 மி.மீ மழை பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு மானியம் வழங்க தேயிலை ஏஜன்ட்கள் வலியுறுத்தல்**

கோத்தகிரி, : நீலகிரி தேயிலை ஏஜன்ட்கள் நலச்சங்க கூட்டம் கோத்தகிரியில் நடைபெற்றது. சங்க பொருளாளர் நடராஜ் வரவேற்றார். தலைவர் சிலாக்கியம் துரை தலைமை வகித்தார். கூட்டத்தில் சங்க புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். துணை தலைவராக ராஜு, செயலாளராக சங்கர், துணை செயலாளராக கண்ணன், இணை செயலாளராக தேவராஜ், நிர்வாக குழு உறுப்பினர்களாக ராஜு, கண்ணப்பன், குமார் உள்ளிட்ட பலர் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில், தேயிலை மகசூல் தற்போது அதிக விளைச்சல் காரணமாகவும், மேலும் தொழிற்சாலைகளில் வாரத்தில் 3 நாட்கள் கொள்முதல் செய்த காரணத்தினால் பெரும்பாலான சிறு தேயிலை விவசாயிகள் அறுவடைக்கு தயாரான பச்சை தேயிலையை பறிக்க முடியாமல் அவதிக்குள்ளாகினர். எனவே சிறு, குறு விவசாயிகளின் நலன் கருதி தரத்தினை காரணம் காட்டாமல் செடிகளில் அறுவடைக்கு தயாராக உள்ள பசுந் தேயிலைகளை தொழிற்சாலைகளில் கொள்முதல் செய்து உதவ தேயிலை வாரியம் மற்றும் தொழிற்சாலைகளை கேட்டு கொள்வது, கடந்த சில வாரங்களாக தேயிலையின் வார விலை ரூ 9 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் தேயிலை பறிக்க மட்டும் விவசாயிகளுகககு கிலோ ரூ. 7 வரை செலவாகிறது. எனவே விவாசாயிகளின் நலன் கருதி மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும், நடப்பு அறுவடை முடிந்த பின் இனி வரும் காலங்களில் தரமான தேயிலை கொடுத்து அதிக விலை பெற அனைத்து விவசாயிகளிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் துணை செயலாளர் நன்றி கூறினார்.

**<u>கொடிவணீக காய்கறிகளுக்கு பந்தல் அமைக்க மானியம் வேளாண் அதிகாரி தகவல்</u>**

பெரம்பலூர், : கொடிவகை காய்கறிகளுக்கு பந்தல் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருவதாக வேளாண் அதிகாரி தெரிவித்தார். பெரம்பலூர் மாவட்டத்தில தோட்டக்கலைத் துறையின் சார்பில் காய்கறி சாகுபடி பரப்பினை அதிகரித்து, அதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் அனைத்து வட்டாரங்களிலும் காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ், 2013-14ம்ஆண்டிற்கு வெங்காயம் மற்றும் காய்கறிசாகுபடி செய்திடும் விவசாயிகளுக்கு அயிலூர் கிராமத் திலுள்ள சிவன்கோவில் வளாகத்தில் நவீனசாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்த சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் அயிலூர், அ.குடிக்காடு, கல்பாடி, எறைய சமுத்திரம், எறையூர், நெடுவாசல் ஆகிய கிராமத்திலிருந்து 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில், வாலிகண்டபுரம் வேளாண் அறிவியல் மையத்தின் தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் கதிரவன், சின்னவெங்காயம் மற்றும் காய்கறி சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடம் தெளிவாக எடுத்துரைத்தார். மண் பரிசோதனைசெய்து மண்ணில்உள்ள சத்துகளின் அடிப்படையில் சாகுபடி செய்யப்படும் பயிருக்கு ஏற்ற உரங்களை உரியஅளவில் இடுதல், விதைநேர்த்தி, வீரிய ரக காய்கறிகள் சாகுபடியில், குழித்தட்டு முறையில் திரட்சியான நாற்றுகள் தயாரித்தல், சொட்டுநீர் பாசனம் அமைத்து காய்கறிகள் சாகுபடி மேற்கொள்வதன் மூலம் இருப்பில் உள்ளநீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளுதல், நீர்வழி

உரமிடுதல் மூலம் உரச்செலவை குறை த்து உரங்கள் வீணாவதை தவிர்த்தல், மற்றும் களைக்கட்டுப்பாடுகுறித்து விளக்கிக் கூறப்பட்டது. மேலும், உயிர்உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகள், முக் கியத்துவம் மற்றும் உயிர்கட்டுப்பாட்டு காரணிகள் பயன்படுத்தி நோயை கட்டுப்படுத் தும்முறை, நுண்ணூட்டங்கள் பயிருக்கு இடுவதன்மூலம் ஏற்படும் நன்மைகள் குறித் தும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. மேலும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப் படுத்தும்முறைகள் பற்றியும் வாலிகண்டபுரம் வேளாண்அறிவியல்மைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் கதிரவன் விளக்கிக் கூறினார். பயிற்சியில் கலெக்டரின் நேர்முகஉதவியாளர் கனக சபை கலந்துகொண்டு, பே சினார். தோட்டக்கலைத் துறை துணைஇயக்குநர் (பொ) இந்திரா கலந்துகொண்டு, தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின்மூலம் நிழல் வலைக்கூடம் அமைத்தல், மண்புழு உரத்தொட்டி மற்றும் மண்புழு உர படுக் கைதயாரித்தல், கொடிவகை காய்கறிகள் சாகுபடிக்கு பந்தல் அமைப்பதற்கான மானி யம், வீரிய ரக காய்கறிகள் சாகுபடி, மலர்கள்சாகுபடி, நறுமணப் பயிர்கள் சாகு படி மற் றும் பழப்பயிர்கள் சாகுபடிக்கு விவசாயிகளு க்கு வழங்கப்படும் மானியம் குறித் தும், சொட்டுநீர்ப்பாசனம் மற்றும் தெளிப்புநீர் பாச னம் அமைக்க வழங்கப்படு ம் மானியம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கினார். பயிற்சியில் பெரம்பலூர் தோட்டக்கலை உதவி இயக்குநர்(பொ) ஆனந்தன், தோட் டக்கலை உதவிஅலுவலர்கள் கனகராஜ், நாகரா ஜன், பாலசுப்ரமணியன், மகேஸ்வரி உள்ளிட்ட அலுவலர்கள் விவசாயிகள்பலரும் கலந்து கொண்டனர்

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

### இன்றைய வேளாண் செய்திகள்

**<u>ஜெனீவாவில் உலக நாடுகள் இடையே வர்த்தக நடைமுறை ஒப்பந்தம் நிறைவேற்றும் முயற்சி தோல்வி இந்தியா மீது அமெரிக்கா குற்றச்சாட்டு</u>**

**ஜெனீவா**

**ஜெனீவாவில் உலக நாடுகள் இடையே, வர்த்தக நடைமுறை ஒப்பந்தம் நிறைவேற்றும் முயற்சி தோல்வி கண்டுவிட்டது. இதற்கு இந்தியா மீது அமெரிக்கா குற்றம் சாட்டி உள்ளது. பாலியில் எடுத்த முடிவு 'டபிள்யூ.டி.ஓ.' என்னும் உலக வர்த்தக அமைப்பு, சர்வதேச வர்த்தகத்தை தாராளமயமாக்கி, மேற்பார்வையிட்டு வருகிறது. இந்த அமைப்பின் மாநாடு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், இந்தோனேஷியாவில்உள்ளபாலியில்நடந்தது. அப்போது, வர்த்தக நடைமுறைகளை எளிதாக்கும் ஒப்பந்தம் ஒன்றை உறுப்பு நாடுகள் செய்து கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. இது உலகளாவிய சுங்க நடைமுறைகளை காலநிலைக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்ளவும் உதவும். இந்த உடன்பாட்டினை றுதிசெய்வதற்குநேற்றுகடைசிநாளாகும்.**

**தோல்வி**

**ஆனால் இதில் 160 உறுப்பு நாடுகள் இடையே கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை. இதனால் இந்த உடன்பாட்டினை உருவாக்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.**

இதுபற்றி உலக வர்த்தக அமைப்பின் தலைமை இயக்குனர் ராபர்ட்டோ அஜெவெடோ ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர், “வர்த்தக நடைமுறைகளை எளிதாக்கும் உடன்பாட்டினை எட்டுவதில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டுக்கு தீர்வு காண முடியாமல் போய் விட்டது” என கூறி உள்ளார். இந்தியா மீது குற்றச்சாட்டு இந்த உடன்பாடு ஏற்படாமல் போனது குறித்து உலக வர்த்தக அமைப்பிற்கான அமெரிக்க தூதர் மைக்கேல் புங்கே கருத்து தெரிவிக்கையில், “இந்த உடன்பாடு ஏற்படுவதில் ஏற்பட்டுள்ள தோல்வியானது, உலக வர்த்தக அமைப்பையே ஒரு நிச்சயமற்ற சூழலுக்கு தள்ளி விட்டது. ஏற்கனவே பாலியில் நடந்த மாநாட்டில் அளித்த வாக்குறுதிகளை சில நாடுகள் மதித்து செயல்படுத்த விரும்பாமல் போனதால் நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம். ஏமாற்றமும் அடைந்திருக்கிறோம்” எனகூறினார். இந்த உடன்பாட்டினை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு அமெரிக்காவை இந்தியா வெளிப்படையாக குற்றம் சாட்டி அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆஸ்திரேலியாகருத்து இதுபற்றி ஆஸ்திரேலிய வர்த்தக மந்திரி ஆண்ட்ரூ ராப்பும் ஏமாற்றம் தெரிவித்தார். அப்போது அவர், “உரிய கெடுவுக்குள் இந்த உடன்பாட்டை எட்ட முடியாமல் போனதில் ஆஸ்திரேலியா ஏமாற்றம் அடைந்துள்ளது. இது பாலியில் நடந்த மாநாட்டில் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கைக்கு விழுந்தமிகப்பெரியஅடி”எனகூறினார்.

இந்தியாவின்நிலைப்பாடு

இந்திய தரப்பில் வர்த்தக நடைமுறைகளை எளிதாக்கும் உடன்பாட்டில் கையெழுத்திடும் வேளையில், அதற்கு இணையாக உணவுப்பொருட்களை மானிய விலையில் வழங்கவும், உணவு தானியங்களை இருப்பு வைக்கவும் உலக வர்த்தக அமைப்பு வழங்கியுள்ள சுதந்திரத்தை விட கூடுதல் சுதந்திரம் அளித்து, செய்து கொள்ள வேண்டிய உடன்பாட்டில் மேலும் முன்னேற்றம் காண வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

<u>வன வேலைவாய்ப்பில் 100 சதவீதம் உத்தரவாத கோரிக்கை; பேச்சுவார்த்தை தோல்வி</u>



சென்னை,

வன வேலைவாய்ப்பில் 100 சதவீதம் உத்தரவாதம் அளிக்கக்கோரி, அமைச்சர்களுடன் வனக் கல்லூரி மாணவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். ஆனால், முடிவு எதுவும் எட்டப்படாததால் அவர்கள் திரும்பிச் சென்றனர்.

மாணவர்கள் போராட்டம்

மேட்டுப்பாளையம் வனக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள், கடந்த 11 நாட்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர். வனப் பணியிடங்களில், தங்களுக்கு நேரடி தேர்வு மூலம் 100 சதவீத வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு கட்ட போராட்டம் நடத்தியுள்ளனர். இதுகுறித்து, பல்வேறு அரசில் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களும் சட்டசபையில் அரசின் கவனத்தை ஈர்த்துபேசினார்கள். இந்த நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று மாலை வனக் கல்லூரி மாணவர்களுடன் பேச்சு வார்த்தை நடந்தது. இந்த பேச்சு வார்த்தையில் வனத்துறை அமைச்சர் ஆனந்தன், விவசாயத்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் 7 பேர் கொண்ட மாணவர் குழுவினர் பங்கேற்றனர்.

முடிவுஎட்டப்படவில்லை

இந்த பேச்சு வார்த்தையின்போது, மாணவர்கள் தங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துக் கூறினர். மாலை 4 மணிக்கு தொடங்கிய இந்த பேச்சு வார்த்தை மாலை 6.30 மணி வரை நீடித்தது. அதன்பின்னர், பேச்சு வார்த்தை முடிந்து மாணவர்கள் வெளியே வந்தனர். பேச்சு வார்த்தையில் பங்கேற்ற மாணவி ரும்யா நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.அப்போதுஅவர்கூறியதாவது:–

எங்கள் வனக் கல்லூரியில் படித்த மற்றும் படிக்கும் மாணவர்களுக்கு வனத்துறையில் நேரடி தேர்வு மூலம் 45 சதவீதமும், பதவி உயர்வு மூலம் 55 சதவீதமும் நிரப்பப்படுகிறது. ஆனால் தற்போது வெளியிடப்பட்ட அரசாணை எங்களுக்குரிய நேரடி தேர்வு சதவீதத்தை 25 ஆக குறைத்துள்ளது. இதுகுறித்து எங்களுடைய கவலைகளை பதிவு செய்தோம். அமைச்சர்கள் இதை கனிவுடன் கேட்டு முதல்–அமைச்சரின் பார்வைக்கு கொண்டு செல்வதாக கூறியிருக்கிறார்கள். நாங்கள் இன்று நடந்த பேச்சு வார்த்தை குறித்து மேட்டுப்பாளையத்தில் போராட்டம் நடத்தி வரும் எங்கள் நண்பர்கள் 150 பேருடன் கலந்துபேசி முடிவு அறிவிப்போம். எங்களுக்கு 100 சதவீத வேலைவாய்ப்பு உத்தரவாதத்தை வழங்கும், 45 சதவீத நேரடி தேர்வை மீண்டும் தொடர அனுமதிக்கவேண்டும். இவ்வாறுஅவர்கூறினார். இந்த பேச்சு வார்த்தையில் எந்தவொரு முடிவும் எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

<u>கோவை மாவட்டத்தில் ஒரே நாளில் 388 மி.மீ. மழை பதிவு: பலத்த மழை காரணமாக 6 குளங்கள் நிரம்பின நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு</u>



கோவை மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் 6 குளங்கள் நிரம்பின. மற்ற குளங்க ளுக்கும் தண்ணீர் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால் நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது.

<u>தென்மேற்கு பருவமழை தீவிரம்</u>

கோவை மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தாமதமாக கடந்த 10–ந் தேதி தான் தொடங்கியது. அதன் பின்னர் விட்டு விட்டு மழை பெய்தாலும் கடந்த சில நாட்களாக கோவை மாநகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. கோவையின் புறநகர் பகுதியான வால்பாறை மலைப்பகுதிகளிலும், மேற்கு தொடர்ச்சி மலை பகுதியிலும் பலத்த மழை பெய்து வருகிறது.

கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தொடர்ந்து மழை பெய்தது. ஆனால் நகர் பகுதிகளில் நேற்றுக்காலையில் வெயில் அடித்தது. புறநகர் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 388 மி.மீ. மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக சின்னகல்லாறில் 154 மி.மீட்டர் மழை பதிவானது.

<u>6 குளங்கள் நிரம்பின</u>

மேற்குதொடர்ச்சி மலையில் பெய்யும் மழை நொய்யல் ஆறு வழியாக கோவையில் உள்ள குளங்க ளுக்கு வருகிறது. சித்திரை சாவடி அணையிலிருந்து வரும் நீர் நரசாம்பதி, கொலராம்பதி ஆகிய குளுங் களுக்கு வருகிறது. தொடர்மழை காரணமாக கோவை மற்றும் அதை சுற்றியுள்ள உக்குளம், புதுக்குளம், கொலராம்பதி, நரசாம்பதி, கங்கநாராயண சமுத்திரம், சொட்டையாண்டிகுட்டை ஆகிய 6 குளங்கள் நிரம்பின.

மேலும் பேரூர் பெரியகுளம், குனியமுத்தூர் செங்குளம். கிருஷ்ணாம்பதி குளம் ஆகிய குளங்கள் பாதியளவு நிறைந்துள்ளன. அந்த குளங்களுக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குறிச்சி குளத்துக்கு தண்ணீர் வரவில்லை என்றும் நீர்வரத்து பகுதியில் அடைப்பை அகற்ற வேண்டும் விவசாயி கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதைதொடர்ந்து அடைப்புகள் அகற்றப்பட்டதால் குறிச்சி குளத் துக்கு தற்போது தொடர்ந்து நீர் வந்து கொண்டிருக்கிறது.

இதே போல கோவை உக்கடம் பெரியகுளத்துக்கும் நீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த குளம் நிறைந்தால் தான் அடுத்து வாலாங்குளத்துக்கு தண்ணீர் வரும். ஆனால் வாலாங்குளத்தின் நுழைவுவாயிலில் ஆகாய தாமரைகள் அதிக அளவு வளர்ந்திருப்பதால் குளத்துக்கு நீர் வந்தாலும் அவை குளத்துக்குள் செல்லுமா என்று கேள்விக்குறி எழுந்துள்ளது. எனவே வாலாங்குளத்தில் உள்ள ஆகாய தாமரைகளை அகற்ற வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை எழுப்பியுள்ளனர்.

சிங்காநல்லூர் குளத்தேறிக்கும், வெள்ளலூர் குளத்துக்கும் இன்னும் தண்ணீர் வரவில்லை.

<u>நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்பு</u>

கோவை குளங்கள் நிரம்பி வருவது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:– தென்மேற்கு பருவமழை வலுத்து வருவதால் மேற்குதொடர்ச்சி மலையில் பெய்யும் மழை நொய்யல் ஆறு வழியாக கோவை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள குளங்களுக்கு வருகிறது. தற்போது நொய்யல் ஆற்றில் வினாடிக்கு 150 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மேற்கு தொடர்ச்சி மலையையொட்டி உள்ள குளங்கள் நிறைந்தால் அந்த குளங்கள் மூலம் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும். ஆனால் கோவை மாநகரையொட்டி உள்ள உக்கடம் பெரியகுளம், குறிச்சி குளம், பேரூர் பெரியகுளங்கள் நிரம்பினால் பாசனத்துக்கும், குடிப்பதற்கும் பயன்படுத்த முடியாது. ஆனால் நிலத்தடி நீர் உயர

வாய்ப்பு உள்ளது. குறிச்சி குளம் 25 சதவீதம் கூட நிறைய வில்லை. ஆனால் அதை சுற்றி சிறிய அளவில் விவசாயம் செய்பவர்களுக்கு முன்பு ஒரு மணி நேரம் தான் நீர் இறைக்கும் மோட்டார் மூலம் தண்ணீர் கிடைக்கும் என்றும் தற்போது தொடர்ந்து 5 மணி நேரம் வரை நீர் இறைக்கும் எந்திரம் மூலம் தண்ணீர் கிடைப்பதாக கூறுகிறார்கள். எனவே கோவையில் உள்ள அனைத்து குளங்களும் நிறைந்து விட்டால் நிலத்தடி நீர் மட்டம் ‘கிடு கிடு’ வென்று உயர்ந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>மழை அளவு</u>

கோவை மாவட்டத்தில் நேற்றுக்காலை 8 மணியுடன் முடிவடைந்த வரை 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:–

அன்னூர்–5 மி.மீட்டர்

பீளமேடு விமான நிலையம்–6.80 மி.மீ.

மேட்டுப்பாளையம்–1.10 மி.மீ.

பொள்ளாச்சி–20 மி.மீ.

பெரியநாயக்கன்பாளையம்–4 மி.மீ.

சூலூர்–5.50 மி.மீ.

தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம்–10.20 மி.மீ.

சின்கோனா–65 மி.மீ.

சின்னகல்லாறு–154

வால்பாறை பி.ஏ.பி.–55 மி.மீ.

வால்பாறை தாலுகா–52 மி.மீ.

கோவை தெற்கு–9.40 மி.மீ.

மொத்தம்–388 மி.மீட்டர்.

<u>அணைகளின் நீர்மட்டம்</u>

பலத்த மழை காரணமாக கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள அணைகளுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளது. அதன் விவரம் வருமாறு– (அடைப்புக்குறிக்குள் அணையின் மொத்த கொள்ளளவு குறிப்பிடப்பட்டுள்ளது)

<u>சோலையாறு– 158.77அடி (160 அடி)</u>

நீர்வரத்து (வினாடிக்கு) 3,331 கன அடி.

நீர் வெளியேற்றம் (வினாடிக்கு)– 931 கன அடி

<u>பரம்பிக்குளம்–31.53(72)</u>

நீர்வரத்து–1,822 கன அடி.

நீர்வெளியேற்றம்–22 கன அடி.

ஆளியாறு–85.50(120)

நீர்வரத்து–652 கன அடி.

நீர்வெளியேற்றம்–128 கன அடி.

திருமூர்த்தி–15.67(60 அடி)

நீர்வரத்து–1 கன அடி.

நீர்வெளியேற்றம்–22 கன அடி.

அமராவதி–54.66 (90 அடி)

நீர்வரத்து–917 கன அடி.

நீர்வெளியேற்றம்–215 கன அடி.

தி இந்து

தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆப்பிளை விஞ்சியது தக்காளி விலை**

இமாச்சலப் பிரதேசத்தில் இப்போது லாபகரமாக உள்ளது தக்காளி சாகுபடி. ஆப்பிளில் கிடைப்பதை விட கூடுதல் விலை கிடைப்பதால் தக்காளி சாகுபடிக்கு மாறுகின்றனர் குலு தோட்டப்பயிர் விவசாயிகள். மொத்த விலைச் சந்தைகளில் தக்காளி கிலோ ரூ. 40 முதல் 45 வரை விலைபோகிறது. ஆப்பிளோ தரத்துக்கு ஏற்ப கிலோ ரூ. 30-50 விலையில் விற்கப்படுகிறது. 25 கிலோ தக்காளிக்கு இதுவரை ரூ. 250 வரை விலை பெற்ற விவசாயி தற்போது ரூ. 1100 வரை பணம் பார்க்கிறார். எனவே தக்காளி பயிரிடாத விவசாயிகள் நாம் ஏமாந்துவிட்டோம் என வருத்தப்படுகின்றனர். தேவை அதிகரித்துள்ளதும் குறைந்த விளைச்சலுமே தக்காளி விலை ஏற்றத்துக்கு காரணம் என்கிறார் மணாலி காய்கறி சந்தை தலைவர் பூதி பிரகாஷ்.

**விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பேராசிரியரின் விளக்கம்**

தி இந்து' நாளிதழில் புதன்கிழமை தோறும் வெளியாகும் 'நிலமும் வளமும்' பகுதி', விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுவருகிறது. இப்பகுதியில் கடந்த ஜூன் 30-ம் தேதி 'தொழில் முனைவோர் வெற்றிக்கு கால்நடை வளர்ப்பு பயிற்சிகள்' என்ற தலைப்பில் கட்டுரை வெளியானது. இதை படித்துவிட்டு 200-க்கும் அதிகமான விவசாயிகள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையின் பேராசிரியர் மற்றும் தலைவர் பா.டென்சிங் ஞானராஜை செல்போனில் தொடர்பு கொண்டு ஆர்வத்துடன் பல விவரங்களைக் கேட்டுள்ளனர். சென்னை மாதவரம் பால்பண்ணை பகுதியில் உள்ள ஆராய்ச்சிப் பண்ணைக்கும் பல விவசாயிகள் நேரில் சென்று விவரங்களை சேகரித்து சென்றுள்ளனர். செல்போனில் தொடர்பு கொண்டு விவசாயிகள் கேட்ட

சந்தேகங்கள் பற்றி பேராசிரியர் டென்சிங் ஞானராஜ் கூறியதாவது: நல்ல இனத்தைச் சேர்ந்த ஆடு, பசுக்கள், எருமைகள், நாட்டுக் கோழிக் குஞ்சுகள் எங்கு கிடைக்கும் என்று பல விவசாயிகள் கேட்டனர். கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் ஒரிஜினல் தலைச்சேரி ஆட்டுக் குட்டிகள் கிடைக்கின்றன. கிர், சாஹிவால், தர்பார்க்கர் இனப் பசுக்கள் வட இந்திய மாநிலங்களை பூர்வீகமாகக் கொண்டவை. கிர் பசுக்கள் குஜராத்தில் கிடைக்கின்றன. முர்ரா இன எருமைகள் ஹரியாணா, டெல்லியில் கிடைக்கின்றன. ஒரிஜினல் நாட்டுக் கோழி குஞ்சுகள் பல பகுதிகளில் கிடைக் கின்றன. உங்களுக்கு அருகே உள்ள அரசு கால்நடைப் பண்ணைகளை அணுகினால், அவர்கள் சுற்றுவட்டாரப் பகுதியில் நாட்டுக் கோழி குஞ்சு எங்கு வாங்கலாம் என்ற விவரத்தை தெரிவிப்பார்கள். ராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளைச் சேர்ந்த பெரு விவசாயிகள் சிலர், தங்களிடம் மானாவாரி நிலம் பெருமளவு உள்ளதாகவும், இந்த நிலத்தில் எந்த வகை கால்நடைப் பண்ணை அமைக்கலாம் எனவும் கேட்டனர். அத்தகைய நிலங்களில் மேய்ச்சல் முறையில் ஆடு வளர்ப்பு மற்றும் நாட்டுக் கோழி வளர்ப்புக்கான பண்ணைகளை அமைத்தால் நல்ல லாபம் பெறலாம். பரண் மேல் ஆடு வளர்ப்பு முறையில் செம்மறி ஆடு வளர்க்கலாமா, வெள்ளாடு வளர்க்கலாமா என்று பலர் கேட்டனர். வெள்ளாடு வளர்ப்புக்குதான் இந்த முறை ஏற்றது. வெண்பன்றி வளர்ப்பில் அதிக லாபம் கிடைக்குமா என்றும் பலர் ஆர்வத்தோடு விசாரித்தனர். வெண் பன்றி இறைச்சிக்கான தேவை மிக அதிகமாக உள்ளது. ஆனால், அதற்கேற்ற உற்பத்தி இல்லை. எனவே, வெண்பன்றி வளர்ப்பு பண்ணை அமைத்தால் நல்ல லாபம் பெறலாம். இவ்வாறு பேராசிரியர் டென்சிங் ஞானராஜ் கூறினார்.